**செய்தி வெளியீடு எண் : 2286** **நாள் : 16.11.2023**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்டு கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தெரிவாளர்களுக்கு சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் (நிலை–3) மற்றும் தட்டச்சர்கள் பணியிடங்களுக்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் பணிநியமன ஆணை வழங்கினார்**

கூட்டுறவுத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள மண்டல கூடுதல் பதிவாளர் மற்றும் இணைப் பதிவாளர்கள் மற்றும் அவர்களது சார் நிலை அலுவலகங்களுக்கு 55 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் (நிலை 3) பணியிடங்களும் 167 தட்டச்சர்கள் பணியிடங்களும் பணிநிலைத் திறனின்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களாகும். இவை தொகுதி 4ன் கீழ் வகைப்படுத்தப்பட்ட பணியிடங்களாகும்.

இப்பணியிடங்களில் காலியாக இருந்த 14 சுருக்கெழுத்துத் தட்டச்சர் (நிலை 3) பணியிடங்களுக்கும் 18 தட்டச்சர்கள் பணியிடங்களுக்கும் உரிய தெரிவாளர்களை தெரிந்தெடுக்க தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்.7/2022 நாள் 30.03.2022–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் உள்ளடங்கும். இவ்வறிவிக்கையின்படி தொகுதி–4ன் கீழான பணியிடங்களுக்கு 24.07.2022 அன்று எழுத்துத் தேர்வு நடைபெற்றது.

அத்தேர்வில் தேர்ச்சி பெற்ற தெரிவாளர்களில் 14 தெரிவாளர்கள் சுருக்கெழுத்துத் தட்டச்சர் (நிலை 3) பணியிடங்களுக்கும் 18 தெரிவாளர்கள் தட்டச்சர்கள் பணியிடங்களுக்கும் கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டனர்.

மேற்குறிப்பிட்டவாறு தேர்வாணையத்தின் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டு கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தெரிவாளர்களுக்கு சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் (நிலை–3) மற்றும் தட்டச்சர்கள் பணியிடங்களுக்கான மண்டல ஒதுக்கீடு செய்யப்பட்ட பணி நியமன ஆணைகள் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களால் இன்று (16.11.2023) வழங்கப்பட்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப., மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு.ந.சுப்பையன், இ.ஆ.ப., அவர்களும் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in